


**05. 11. 2025**

தலைப்புச் செய்திகள்

1. பீஹாரில் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை நடைபெறும் முதற்கட்ட வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

2. குருநானக் தேவ்-ன் போதனைகள், சிறந்த சமூகத்திற்கு வழிகோலுவதாக குடியரசுதலைவர் திருமதி திரௌபதி முர்முவும், பிரதமர் திரு.நரேந்திரமோடியும் தெரிவித்துள்ளனர்.

3. வேலூரில் 32 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

4. தமிழக மக்களை பாதிக்காத வகையில் அவர்களது நியாயமான கோரிக்கைகளை மாநில அரசு செயல்படுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

5. ஐப்பசி பௌர்ணமியை ஒட்டி சிவாலயங்களில் அன்னாபிஷேக விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

**********

பீஹார்

பீஹாரில் 18 மாவட்டங்களின் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை நடைபெறும் முதல்கட்ட வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

இத்தேர்தலில் 3 கோடியே 75 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள், ஆயிரத்து 314 வேட்பாளர்களின் வெற்றியை நிர்ணயிக்க உள்ளனர்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கும்,

ராஷ்ட்ரிய ஜனதாதளம் தலைமையிலான மகா கத் பந்தன் கூட்டணிக்கும் இடையே பிரதான போட்டி நிலவுகிறது.

122 தொகுதிகளுக்கான 2ஆம் கட்ட வாக்குப்பதிவு வரும் 11ஆம் தேதி நடைபெறும்.

இவ்விரு கட்ட தேர்தலிலும் பதிவாகும் வாக்குகள் வரும் 14ஆம் தேதி எண்ணப்படும்.

**********

குருநானக் ஜெயந்தி

சீக்கிய மதத்தை தோற்றுவித்த குருநானக்கின் 556-வது பிறந்த நாள் குருநானக் ஜெயந்தியாக நாடுமுழுவதும் இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி பஞ்சாப் அமிர்தசரஸ் பொற்கோவில் உட்பட குருத்வாராக்களில் சீக்கியர்கள் வழிபாடுகளை மேற்கொண்டனர்.

குடியரசுதலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் வெளியிட்ட செய்தியில் குருநானக்கின் கொள்கைகள் தேச கட்டமைப்பிற்கு வழிகோலும் வகையில் அவரது கொள்கைகளை பின்பற்றி சிறந்த சமூகத்தை படைக்க இந்நாள் நமக்கு உத்வேகம் அளிப்பதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் ஸ்ரீகுருநானக்கின் போதனைகள் பரிவு, இரக்கம், சமத்துவம், சேவை மனப்பான்மையை ஊக்குவித்து மனித நேயத்துடன் கூடிய நிலையான சமூகத்திற்கு வழிகோலுவதாக கூறியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட செய்தியில் குருநானக்கின் தெய்வீக போதனைகள் தன்னலமற்ற சேவையை ஊக்குவிப்பதாக கூறியுள்ளார்.

தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி வெளியிட்ட செய்தியில் வரும் வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் குருநானக்கின் போதனைகள் நம்மை வழிநடத்தும் என குறிப்பிட்டுள்ளார்.

**********

ஜெய்சங்கர்

இந்திய - ஜப்பான் நாடுகளிடையிலான நட்புறவு இந்தோ பசிஃபிக் பிராந்தியத்தின் ஸ்திரதன்மையை மேம்படுத்தும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 8ஆவது இந்திய - ஜப்பான் இந்தோ பசிஃபிக் கூட்டமைப்பு மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், செயற்கை நுண்ணறிவு, அரிய கனிமங்கள், தூய்மை எரிசக்தி, விண்வெளி துறைகளில் முதலீடுகளை ஊக்குவித்து விநியோக சங்கிலியை வலுப்படுத்த இருநாடுகளுக்கிடையிலான நட்புறவு, வழிகோல வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்தோ பசிஃபிக் பிராந்தியத்தில் அமைதியையும், வளர்ச்சியையும் முன்னெடுத்து செல்வதில், இந்தியாவிற்கும் ஜப்பானிற்கும் உள்ள மகத்தான பொறுப்பை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

**********

பசுமை ஹைட்ரஜன்

பசுமை ஹைட்ரஜன் தொடர்பான சர்வதேச மாநாடு புதுப்பிக்கதக்க எரிசக்தி துறை அமைச்சகம் சார்பில் வரும் 11 , 12 தேதிகளில் புதுதில்லியில் நடைபெறுகிறது.

பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, கட்டமைப்பு மேம்பாடு, உலகளாவிய ஒத்துழைப்பு போன்றவை குறித்து இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்படுகிறது.

மத்திய அமைச்சர்கள், திரு.பிரல்ஹாத் ஜோஷி, திரு.ஹர்தீப்சிங்பூரி, டாக்டர் ஜிதேந்திரசிங் உட்பட சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்கின்றனர்.

நிதி, திறன்மேம்பாடு, தொழில்நுட்பங்களை நடைமுறைபடுத்துவது போன்றவை இம்மாநாட்டில் விவாதிக்கப்படும்.

நாட்டின் தூய்மை எரிசக்தி பிரிவில் பசுமை ஹைட்ரஜன் முக்கிய பங்காற்றுவதாக புதுப்பிக்கதக்க எரிசக்திதுறை செயலர் திரு.சந்தோஷ்குமார் சாரங்கி தெரிவித்துள்ள நிலையில் இம்மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது.

**********

முதலமைச்சர்

வேலூரில் 32 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி மூலம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் பூங்கா அமைக்க அடிக்கல் நாட்டினார்.

மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை துறை சார்பில் 23 கோடி ரூபாய் செலவில் திருச்செங்கோட்டில் அரசு மருத்துவமனையை திறந்துவைத்தார்.

இந்துசமய அறநிலையத்துறை சார்பில் 18 அர்ச்சகர் ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெறும் மாணாக்கருக்கு ஊக்குத்தொகையை வழங்கினார்.

14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலக கோப்பையையும் முதலமைச்சர் அறிமுகம் செய்துவைத்தார்.

**********

நயினார் நாகேந்திரன்

தமிழக மக்கள் பாதிக்காத வகையில் அவர்தம் நியாயமான கோரிக்கைகளை மாநில அரசு செயல்படுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ஊணங்கல்பட்டியில் பிஜேபி சார்பிலான விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், வரும் சட்டமன்ற தேர்தலில் பிஜேபி, அஇஅதிமுக கூட்டணி ஆட்சி அமைந்தால் நாமக்கல்லில் வேளாண் நிலங்களை கையகப்படுத்தி சிப்காட் அமைக்கும் திட்டம் கொண்டுவரப்படாது என்றார்.

அதேபோல் ரயில்கள் மோகனூரில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

மத்திய அரசுடன் மாநில அரசு இணக்கமாக இருந்தால் தான் கூடுதல் நிதி பெறமுடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் போதைபொருள் புழக்கமே கோவை பாலியல் சம்பவம் உள்ளிட்ட குற்றங்களுக்கு காரணம் என்றும் திரு.நயினார் நாகேந்திரன் கூறினார்.

**********

ஆளுநர்

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநரும் பல்கலைகழக வேந்தருமான திரு.ஆர்.என்.ரவி மாணாக்கருக்கு இன்று பிற்பகல் பட்டங்களை வழங்குகிறார்.

ஆளுநரின் வருகையை ஒட்டி, கொடைக்கானலில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**********

மா. சுப்பிரமணியன்

சேலம் மாவட்டம் எடப்பாடியில் உள்ள அரசு மருத்துவமனையை மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் இன்று ஆய்வு செய்தார்.

நோயாளிகளிடம் சிகிச்சை முறைகளை கேட்டறிந்த அவர், உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து, மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

**********

மீன்வள கணக்கெடுப்பு

தேசிய கடல் மீன்வள கணக்கெடுப்பு பணிகளின் ஒருபகுதியாக தூத்துக்குடியில் கணக்கெடுப்பு பணிகள் தொடங்கியுள்ளன.

5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த கணக்கெடுப்பு பணிகளின் கீழ் தூத்துக்குடி, திருநெல்வேலி கன்னியாகுமரி உள்ளிட்ட கடற்கரை மாவட்டங்களில் இப்பணிகளை மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மையம் மேற்கொண்டுள்ளது.

இந்த கணக்கெடுப்பு பணிகள் கடல் உயிரின பாதுகாப்பு கல்வி, தொழில் வாய்ப்புகள் போன்றவற்றிற்கான நெறிமுகைளை உருவாக்க வழிகோலுவதாக எமது தூத்துக்குடி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

அன்னாபிஷேகம்

ஐப்பசி பவுர்ணமியை ஒட்டி சிவாலங்களில் அன்னாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் திருக்கோவிலில் அன்னாபிஷேகம் தற்போது விமரிசையாக நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

தஞ்சை பிரகதீஸ்வரர் திருக்கோவிலில் இன்றுமாலை அன்னாபிஷேக அலங்கார தரிசனம் நடைபெறும் என்று எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

**********

பறவைகள் சரணாலயம்

வடகிழக்கு பருவமழை சீசனை ஒட்டி நாகை கோயடிக்கரை பறவைகள் சரணாலயத்தில் பறவைகளின் வரத்து அதிகரித்துள்ளது.

ரஷ்யா, ஈரான், ஈராக், இலங்கை, சைபீரியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த 200க்கும் அதிகமான பறவை இனங்கள் இச்சரணாலயத்திற்கு வந்துள்ளன.

பொதுமக்கள் இப்பறவைகளை பார்வையிட வனத்துறையினர் சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

**********

மாட்டுவண்டி

தேனி மாவட்டம் கம்பம் அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோவில் திருவிழாவை முன்னிட்டு இரட்டை மாட்டுவண்டி பந்தயம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற இப்போட்டியில் 200க்கும் மேற்பட்ட ஜோடி மாடுகள் களமிறங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

இருவரி

திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் சர்தார் வல்லபாய் பட்டேலின் 150ஆவது பிறந்த

தினத்தை ஒட்டி ஒற்றுமை பயணத்தை ஆட்சித்தலைவர் திரு.பிரதாப் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

ஏராளமான கல்லூரி மாணாக்கர் மூவர்ண தேசிய கொடியுடன் இதில் பங்கேற்றனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம் ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி தலைமையில் வரும் 11ஆம் தேதி நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டம் அமராவதிபுதூர், செஞ்சை நாட்டார் சங்கராபுரம், பாதரக்குடி ஆகிய நான்கு கண்மாய்களில் மீன்பிடி குத்தகை பெற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் கொடிவேரி அணையில் இன்றுமுதல் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**********

வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தஞ்சை திருவாரூர், நாகை மயிலாடுதுறை புதுக்கோட்டை ராமநாதபுரம் சிவகங்கை அரியலூர் பெரம்பலூர் சேலம் தர்மபுரி கிருஷ்ணகிரி நாமக்கல் திருச்சி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு வங்ககடல் பகுதியில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்று இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

**********

டென்னிஸ்

ஜப்பான் சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், நெதர்லாந்தின் மிக் இணை – அமெரிக்க, ஜப்பான இணையை நாளை எதிர்கொள்கிறது.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ஜீவன் இணை – ஜப்பான், மலேசிய இணையை 6-3 7-6 என்ற நேர் செட்களில் இன்று வென்று காலிறுதிக்கு முன்னேறியது.

**********

கிரிக்கெட்

இந்திய ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 4-வது 20-20 கிரிக்கெட் போட்டி நாளை குயின்ஸ்லேண்டில் நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சம நிலையில் உள்ளன.

**********

டென்னிஸ்

ஃபிரான்சில் நடைபெறும் ஏ.டி.பி டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரித்விக்பொலிபள்ளி – அர்ஜுன் கதே இணை – செக் குடியரசு இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********

மகளிர் கிரிக்கெட்அணி

உலக கோப்பையை வென்று தாயகம் திரும்பிய இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கு புதுதில்லி விமான நிலையத்தில் இன்று உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் திரு.நரேந்திரமோடியை சந்தித்து இவர்கள் வாழ்த்துபெற உள்ளனர்.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

**********